**சுருக்கம்**

பள்ளிக் கல்வி – 2011–12ஆம் கல்வி ஆண்டில், 100 அரசு / நகராட்சி / மாநகராட்சி உயர்நிலைப் பள்ளிகளை மேல்நிலைப் பள்ளிகளாக நிலை உயர்த்துதல்– மற்றும் பணியிடங்கள் தோற்றுவித்தல் – ஆணை வெளியிடப்படுகின்றது.

---

**பள்ளிக்கல்வி (மேநிக2)துறை**

அரசாணை(நிலை)எண்.120 நாள் : 08.08.2011

திருவள்ளுவராண்டு 2042

ஆடி 23 –ம் நாள்

படிக்க:–

பள்ளிக் கல்வி இயக்குநரின் கடிதம் ந.க.எண்.114409/டபிள்யு4 / இ2/10 , நாள்.12.07.2011.

–––––––

**ஆணை:–**

2011–12ம் கல்வி ஆண்டில் 100 அரசு/நகராட்சி/ மாநகராட்சி உயர்நிலைப் பள்ளிகளை மேல்நிலைப் பள்ளிகளாக நிலை உயர்த்த அரசு அனுமதி அளித்து ஆணையிடுகின்றது. நிலை உயர்த்தப்படும் பள்ளிகளின் விவரம் இவ்வாணையின் இணைப்பில் கொடுக்கப்பட்டுள்ளது.

2. நிலை உயர்த்தப்படும் மேல்நிலைப் பள்ளிகளுக்கு பணியிடங்கள் வழங்கப்படுவது குறித்து பின்வரும் ஆணைகள் வெளியிடப்படுகின்றன:–

(i). மேல்நிலைப் பள்ளிகளாக நிலை உயர்த்தப்படும் உயர்நிலைப் பள்ளி ஒவ்வொன்றிலும் ரூ.9300–34800 + தரஊதியம் 4600 என்ற ஊதிய விகிதத்தில் உள்ள உயர்நிலைப் பள்ளித் தலைமையாசிரியர் பணியிடத்தை ரூ.15600–39100 + தரஊதியம் ரூ.5700/– என்ற ஊதிய விகிதத்தில் மேல்நிலைப் பள்ளித் தலைமையாசிரியர் பணியிடமாக நிலை உயர்த்திட ஒப்பளிப்பு வழங்கப்படுகிறது.

(ii). மேல்நிலைப் பள்ளிகளாக நிலை உயர்த்தப்படும் பள்ளி ஒவ்வொன்றிற்கும் ரூ.9300–34800+ தர ஊதியம் ரூ.4800 என்ற ஊதிய விகிதத்தில், கீழே குறிப்பிடப்பட்டுள்ள பாடங்களுக்கென 9 முதுகலை ஆசிரியர் பணியிடங்கள் வீதம் 900 பணியிடங்கள் அவை நிரப்பப்படும் நாளில் இருந்து ஓராண்டு காலத்திற்கு தற்காலிகமாக ஒப்பளிப்பு செய்யப்படுகிறது:

1. தமிழ்
2. ஆங்கிலம்
3. கணிதம்
4. இயற்பியல்
5. வேதியியல்
6. உயிரியல்
7. வரலாறு
8. பொருளியல் மற்றும்
9. வணிகவியல்

(iii) மேலே குறிப்பிடப்பட்டுள்ள பணியிடங்களில் பணியமர்த்தப்படுவோர் சம்பளம் மற்றும் ஏனைய படிகளை பெறத் தகுதியுடையவர்களாவர்.

3. நிலை உயர்த்தும் பள்ளிகள் குறித்து அரசு கீழ்க்கண்டவாறு ஆணையிடுகிறது:–

i. பள்ளிகள் நிலை உயர்த்தப்படும் போது 1:40 என்ற ஆசிரியர்–மாணவர் விகிதம் உள்ளதை உறுதி செய்துக் கொள்ள வேண்டும்.

ii. நிலை உயர்த்தப்படும் பள்ளிகள் தமிழ்நாடு மேல்நிலைக் கல்வி வாரியத்தின் அங்கீகாரம் மற்றும் ஒப்புதல் பெறுவதற்கு குறிப்பிடப்பட்ட விதிகளை நிறைவு செய்ய வேண்டும்

iii. பள்ளிகளை நிலை உயர்த்துவதற்கு அரசாணை (நிலை) எண்.235, பள்ளிக் கல்வித் துறை, நாள் 24.5.97 மற்றும் அரசாணை (நிலை) எண்.49, பள்ளிக் கல்வித் துறை, நாள் 01.03.2007–ல் நிர்ணயிக்கப்பட்ட நெறிமுறைகளை நிலை உயர்த்தப்படும் பள்ளிகள் நிறைவு செய்யப்படுவதை பள்ளிக் கல்வி இயக்குநர் உறுதி செய்ய வேண்டும்.

iv. அரசாணை (நிலை) எண்.1360, கல்வி, நாள் 23.9.1954ல் தெரிவிக்கப்பட்டுள்ளவாறு, உள்ளூர் குழுவினர் செலவில் ஒவ்வொரு பள்ளிக்கும் நிரந்தர கட்டடவசதி செய்து தருவதை சம்பந்தப்பட்ட முதன்மைக் கல்வி அலுவலர் கண்காணிக்க வேண்டும்.

4. தரம் உயர்த்தப்பட்ட மற்றும் புதிதாக தோற்றுவிக்கப்படும் பணியிடங்களின் சம்பளம் குறித்த செலவினம் ஒரு "புது துணைப் பணித்" திட்டமாகக் (New Instrument of Service) கருதப்படும். இச்செலவினம் 2011–2012 ஆம் ஆண்டுக்கான துணை மதிப்பீடுகளில் சேர்க்கப்பட்டு சட்டப் பேரவையின் ஒப்புதல் பெறப்படும். அவ்வாறு ஒப்புதல் பெறப்படுவதை எதிர்நோக்கி இச்செலவினம் முதற்கண் எதிர்பாராச் செலவு நிதி முன்பணம் மூலம் மேற்கொள்ளப்படும். எதிர்பாராச் செலவு முன்பணத்திற்கான ஒப்பளிப்பு ஆணைகள் நிதித் (வ.செ.தி.பொ–I) துறையில் வெளியிடப்படும். சட்டப் பேரவையின் ஒப்புதலுடன் நிதியொதுக்கம் செய்யப்படும் வரை, மேலே ஒப்பளிப்பு செய்யப்பட்டுள்ள பணியிடங்களின் சம்பளம் குறித்த செலவிற்கு தேவையான நிதியினை நிர்ணயித்து அதற்கு எதிர்பாராச் செலவு நிதி முன்பணம் பெற்றிட ஏதுவாக தேவையான விண்ணப்பத்தை உரிய படிவத்தில் இவ்வரசாணையின் நகலுடன் நிதித்(வ.செ.தி.பொ–I) துறைக்கு அனுப்பி வைக்குமாறு பள்ளிக் கல்வி இயக்குநர் அறிவுறுத்தப்படுகிறார். மேலும், இச்செலவினத்தை 2011–12ம் ஆண்டிற்குரிய துணை மதிப்பீடுகளில் சேர்க்கும் பொருட்டு, உரிய விளக்கக் குறிப்பினை அரசின் நிதி(வரவு செலவு பொது–I)த்துறைக்கு அனுப்பி வைக்குமாறும் பள்ளிக் கல்வி இயக்குநர் கேட்டுக் கொள்ளப்படுகிறார்.

5. நிலை உயர்த்தப்படும் பள்ளிகளில் பணிபுரியும் ஆசிரியர்களின் சம்பளம் குறித்த செலவினம் கீழ்க்கண்ட கணக்குத் தலைப்புகளின் கீழ் பற்று வைக்கப்பட வேண்டும்.:–

**i.** <u>அரசுப் பள்ளிகளுக்கான கணக்குத் தலைப்பு</u>

"2202–பொதுக்கல்வி– 02 இடைநிலைக் கல்வி– 109 அரசு இடைநிலைப் பள்ளிகள்– I - திட்டத்தில் சேராதது– AA அரசு இடைநிலை மற்றும் மேல்நிலைப் பள்ளி ஆசிரியர் மற்றும் பணியாளர்களுக்குச் சம்பளம்.
(து.தொ.கு 2202–02–109 AA 0000)"

ii. <u>நகராட்சி, மாநகராட்சிப் பள்ளிகளுக்கான கணக்குத் தலைப்பு:–</u>

"2202–பொதுக்கல்வி – 02 இடைநிலைக் கல்வி– 109 அரசு இடைநிலைப் பள்ளிகள்– I - திட்டத்தில் சேராதது – AB நகராட்சி மற்றும் மாநகராட்சி இடைநிலை / மேல்நிலைப்பள்ளி ஆசிரியர்களுக்குச் சம்பளங்கள்.
(து.தொ.கு. 2202–02–109–AB–0008)"

6. பள்ளிகள் நிலை உயர்த்தப்படுவது தொடர்பான விரிவான ஆணைகளை உடனே சம்பந்தப்பட்ட முதன்மை கல்வி அலுவலர்களுக்கு வழங்கிடுமாறு பள்ளிக் கல்வி இயக்குநர் அறிவுறுத்தப்படுகிறார்.

7. புதிய மேல்நிலைப் பள்ளிகளின் தலைமை ஆசிரியர்கள் தத்தம் பள்ளியின் தலைமை அலுவலராக (Head of Office) கருதப்படுவர். அவர்களால் அளிக்கப்படும் சம்பளம் மற்றும் இதர செலவிற்கான பட்டியல்களை சரியாக இருக்கும் நிலையில் ஏற்றுக் கொள்ளுமாறு சம்பந்தப்பட்ட சம்பளக் கணக்கு அலுவலர்கள் / கருவூல அலுவலர்கள்/ உதவிக் கருவூல அலுவலர்கள் கேட்டுக் கொள்ளப்படுகின்றார்கள்.

8. இவ்வரசாணை நிதித்துறை அ.சா.கு.எண்.41301/CMPC/2011-1, நாள்.08.08.2011ல் பெற்ற அத்துறையின் இசைவுடன் வெளியிடப்படுகிறது. இதற்கான கூடுதல் நிதியொதுக்கப் பேரேடு எண்.354 (முன்னூற்று ஐம்பத்து நான்கு)

(ஆளுநரின் ஆணைப்படி)

த.சபிதா
அரசு செயலாளர்

பெறுநர்
பள்ளிக் கல்வி இயக்குநர், சென்னை–6
தொடக்கக் கல்வி இயக்குநர், சென்னை–6
அரசு தேர்வுகள் இயக்குநர், சென்னை–6.
மாநகராட்சி ஆணையர், சென்னை–3.
கோவை/மதுரை/திருநெல்வேலி/சேலம்.
மாநில கணக்காயர், சென்னை–18
சம்பளக் கணக்கு அலுவலர், சென்னை–5/18/35/79.
சம்பளக் கணக்கு அலுவலர், மதுரை.
அனைத்து மாவட்டக் கருவூல அலுவலர்கள்.

**நகல்:**
நகராட்சி நிர்வாகம் மற்றும் குடிநீர் வழங்கல் துறை, சென்னை–9
பள்ளிக் கல்வித் துறையின் கீழ் உள்ள அனைத்து துறைத் தலைவர்கள்,
அனைத்து மாவட்ட ஆட்சித் தலைவர்கள்,
நிதித் (கல்வி–II) / (வரவு செலவு பொது I & II) துறை, சென்னை–9
திட்டம், வளர்ச்சி மற்றும் சிறப்பு முயற்சிகள் துறை,சென்னை–9
பள்ளிக் கல்வித் (வரவு–செலவு /எஸ்.) துறை, சென்னை–9.
முதலமைச்சரின் அலுவலகம், சென்னை–9
நிதி அமைச்சரின் அலுவலகம், சென்னை 9
பள்ளிக் கல்வித் துறை அமைச்சரின் அலுவலகம், சென்னை–9
செயலாளரின் தனிச் செயலாளர், பள்ளிக் கல்வித் துறை, சென்னை–9.
பள்ளிக் கல்வித் துறையின் அனைத்துப் பிரிவுகள், சென்னை–9.

/ஆணைப்படி / அனுப்பப்படுகிறது/

அரசு சார்புச் செயலாளர்.

அரசாணை(நிலை)எண்.120, பள்ளிக்கல்வி(மேநிக2)த்துறை, நாள்.08.08.2011.

**இணைப்பு**

2011-2012« fšé M©oš ca®ãiy¥ gŸëfis nkšãiy¥ gŸëfshf ju« ca®¤j¥gL« ca®ãiy¥ gŸëfë‹ g£oaš.

| t.v© | gŸëæ‹ bga® k‰W« ÏU¥Ãl« | kht£l« |
|---|---|---|
| 1. | அரசு உயர்நிலைப்பள்ளி, திருமுடிவாக்கம் (இருப்பு) பழந்தண்டலம் | fhŠÁòu« |
| 2. | அரசு மிஸ்ரிமல் புக்ராஜ் போரா உயர்நிலைப்பள்ளி(பெண்கள்), கிழக்கு தாம்பரம், | காஞ்சிபுரம் |
| 3. | நகராட்சி உயர்நிலைப்பள்ளி, அஸ்தினாபுரம் | காஞ்சிபுரம் |
| 4. | அரசு உயர்நிலைப்பள்ளி, வெண்ணாங்குப்பட்டு, | காஞ்சிபுரம் |
| 5. | அரசு உயர்நிலைப்பள்ளி, ஒட்டேரி விரிவு (வண்டலூர்) | காஞ்சிபுரம் |
| 6. | அரசு உயர்நிலைப்பள்ளி, மேடவாக்கம் | காஞ்சிபுரம் |
| 7. | அரசு உயர்நிலைப்பள்ளி, இலட்சுமிபுரம், மாதவரம் நகரம் | திருவள்ளூர் |
| 8. | அரசு உயர்நிலைப்பள்ளி, ஜே.ஜே.நகர் மேற்குபகுதி | திருவள்ளூர் |
| 9. | அரசு உயர்நிலைப்பள்ளி (பெண்கள்), மணலூர்பேட்டை | விழுப்புரம் |
| 10. | அரசு உயர்நிலைப்பள்ளி, பிரம்மகுண்டம் | விழுப்புரம் |
| 11. | அரசு உயர்நிலைப்பள்ளி, வானூர், | விழுப்புரம் |
| 12. | அரசு உயர்நிலைப் பள்ளி, சரவணம்பாக்கம், | விழுப்புரம் |
| 13. | அரசு உயர்நிலைப் பள்ளி, அசகளத்தூர் | விழுப்புரம் |
| 14. | அரசு உயர்நிலைப்பள்ளி, மேல்செவலாம்பாடி | விழுப்புரம் |
| 15. | அரசு உயர்நிலைப்பள்ளி(பெண்கள்), சங்கராபுரம், | விழுப்புரம் |
| 16. | அரசு உயர்நிலைப்பள்ளி, வீடூர், | விழுப்புரம் |
| 17 | அரசு உயர்நிலைப்பள்ளி, பொன்னங்குப்பம் | விழுப்புரம் |
| 18 | அரசு உயர்நிலைப் பள்ளி, ஏனாதிமங்கலம் | விழுப்புரம் |

| | | |
|---|---|---|
| 19. | நகராட்சி உயர்நிலைப்பள்ளி, பீமநாயக்கன்தோப்பு | விழுப்புரம் |
| 20. | அரசு உயர்நிலைப்பள்ளி, ஓங்கூர் | விழுப்புரம் |
| 21 | அரசு உயர்நிலைப்பள்ளி, கீழக்கல்பூண்டி | கடலூர் |
| 22 | அரசுஉயர்நிலைப்பள்ளி, வடகிருஷ்ணாபுரம் | கடலூர் |
| 23 | அரசு உயர்நிலைப்பள்ளி (பெண்கள்), வேணுகோபாலபுரம்,மஞ்சகுப்பம் | கடலூர் |
| 24. | அரசு உயர்நிலைப்பள்ளி, வெங்கிடாம் பேட்டை | கடலூர் |
| 25 | அரசு உயர்நிலைப்பள்ளி, மேலபுலம் | வேலூர் |
| 26 | அரசு உயர்நிலைப் பள்ளி(பெண்கள்), புதுப்பேட்டை | வேலூர் |
| 27 | அரசு உயர்நிலைப்பள்ளி, மூதூர் | வேலூர் |
| 28 | அரசு உயர்நிலைப்பள்ளி, வளையாத்தூர் | வேலூர் |
| 29 | அரசு உயர்நிலைப் பள்ளி(பெண்கள்), கெஜல்நாயக்கன் பட்டி | வேலூர் |
| 30 | அரசு உயர்நிலைப் பள்ளி(பெண்கள்), பொய்கை | வேலூர் |
| 31 | அரசு உயர்நிலைப்பள்ளி(பெண்கள்), ஊசூர் | வேலூர் |
| 32 | அரசு உயர்நிலைப்பள்ளி, வேடநத்தம் | திருவண்ணாமலை |
| 33 | அரசு உயர்நிலைப்பள்ளி, புன்னைபுதுப்பாளையம் | திருவண்ணாமலை |
| 34 | அரசு உயர்நிலைப்பள்ளி, சானார்பாளையம் | திருவண்ணாமலை |
| 35 | அரசு உயர்நிலைப்பள்ளி, லாடவரம் | திருவண்ணாமலை |
| 36 | அரசு உயர்நிலைப்பள்ளி, நவலை | தருமபுரி |
| 37 | அரசு உயர்நிலைப்பள்ளி, (பெண்கள்), அதியமான்கோட்டை | **தருமபுரி** |
| 38 | அரசு உயர்நிலைப் பள்ளி, நத்தமேடு ,மொரப்பூர் | தருமபுரி |
| 39 | அரசு உயர்நிலைப்பள்ளி, பந்தாரஹள்ளி | தருமபுரி |

| | | |
|---|---|---|
| 40 | அரசு உயர்நிலைப்பள்ளி, மாங்கரை | தருமபுரி |
| 41 | அரசு உயர்நிலைப்பள்ளி, மோரனஅள்ளி | கிருஷ்ணகிரி |
| 42 | அரசு உயர்நிலைப்பள்ளி, மேல்கொட்டாய் | கிருஷ்ணகிரி |
| 43 | அரசு உயர்நிலைப்பள்ளி(ஆண்கள்), ஏணுசோனை. (ஒசூர் தலுக்கா) | கிருஷ்ணகிரி |
| 44 | அரசு உயர்நிலைப்பள்ளி அழகப்பம்பாளையம் புதூர் | சேலம் |
| 45 | அரசு உயர்நிலைப்பள்ளி, இராமமூர்த்திநகர் | சேலம் |
| 46 | அரசு உயர்நிலைப்பள்ளி, கூட்டாத்துப்பட்டி | சேலம் |
| 47 | அரசு உயர்நிலைப்பள்ளி, செந்தாரப்பட்டி | சேலம் |
| 48 | அரசு உயர்நிலைப்பள்ளி, வெள்ளரிவெள்ளி | சேலம் |
| 49 | அரசு உயர்நிலைப் பள்ளி, பாச்சல் | நாமக்கல் |
| 50 | அரசு உயர்நிலைப் பள்ளி, சாலைப்புதூர் (அண்ணாநகர்) | ஈரோடு |
| 51 | அரசு உயர்நிலைப்பள்ளி, தாமரைப்பாளையம் | ஈரோடு |
| 52 | அரசு உயர்நிலைப்பள்ளி, திப்பம்பாளையம் | ஈரோடு |
| 53 | ஈஸ்வரியம்மாள் பத்திரப்பா அரசு உயர்நிலைப் பள்ளி, தென்பொன்முடி | கோவை |
| 54 | நகராட்சி உயர்நிலைப்பள்ளி(பெண்கள்), நேதாஜிரோடு | கோவை |
| 55 | அரசினர் உயர்நிலைப்பள்ளி(பெண்கள்), வால்பாறை | கோவை |
| 56 | அரசு உயர்நிலைப்பள்ளி, சென்னனூர், தென்கரைபேரூராட்சி | கோவை |
| 57 | அரசு உயர்நிலைப்பள்ளி, குளத்துப்பாளையம் | கோவை |
| 58 | அரசு உயர்நிலைப்பள்ளி, திவான்சாபுதூர் | கோவை |
| 59 | அரசு உயர்நிலைப்பள்ளி, வே கள்ளிப்பாளையம் | திருப்பூர் |
| 60 | அரசு உயர்நிலைப்பள்ளி, பூங்குடி | திருச்சிராப்பள்ளி |
| 61 | அரசு உயர்நிலைப்பள்ளி, சிறுகனூர் | திருச்சிராப்பள்ளி |

| | | |
|---|---|---|
| 62 | அரசு உயர்நிலைப்பள்ளி, ஆமணக்கம்பட்டி | திருச்சிராப்பள்ளி |
| 63 | அரசு உயர்நிலைப்பள்ளி, நத்தம் | திருச்சிராப்பள்ளி |
| 64 | அ.உ.நி.பள்ளி, வெங்கலம் | பெரம்பலூர் |
| 65 | அரசு உயர்நிலைப்பள்ளி, பசும்பலூர் | பெரம்பலூர் |
| 66 | அரசு உயர்நிலைப்பள்ளி, இலந்தைக்கூடம் | அரியலூர் |
| 67 | அரசு உயர்நிலைப்பள்ளி, கோவிந்தபுரம் | அரியலூர் |
| 68 | அரசு உயர்நிலைப்பள்ளி, கே.பி.தாழைப்பட்டி | கரூர் |
| 69 | அரசு உயர்நிலைப்பள்ளி, கீழவெளியூர் | கரூர் |
| 70 | அரசு உயர்நிலைப்பள்ளி, அய்யர்மலை | கரூர் |
| 71 | அரசு உயர்நிலைப்பள்ளி, தும்பிவாடி | கரூர் |
| 72 | அரசு உயர்நிலைப்பள்ளி, மருதாந்தலை | புதுக்கோட்டை |
| 73 | அரசு உயர்நிலைப் பள்ளி , இராபூசல் | புதுக்கோட்டை |
| 74 | அரசு உயர்நிலைப் பள்ளி, ஆதனக்கோட்டை | புதுக்கோட்டை |
| 75 | அரசு உயர்நிலைப்பள்ளி, சிதம்பரவிடுதி | புதுக்கோட்டை |
| 76 | அரசு உயர்நிலைப்பள்ளி, பின்னையூர் | தஞ்சாவூர் |
| 77 | அரசு உயர்நிலைப்பள்ளி(பெண்கள்), மாரியம்மன்கோவில் | தஞ்சாவூர் |
| 78 | அரசு உயர்நிலைப்பள்ளி, பாலக்குறிச்சி | நாகப்பட்டினம் |

| | | |
|---|---|---|
| 79 | அரசு உயர்நிலைப்பள்ளி, வேழமுறித்தான்பேட்டை | நாகப்பட்டினம் |
| 80 | அரசு உயர்நிலைப் பள்ளி, ஆலங்குடி | திருவாரூர் |
| 81 | அரசு உயர்நிலைப்பள்ளி, அரித்துவாரமங்கலம் | திருவாரூர் |
| 82 | மதுரை மாநகராட்சி உயர்நிலைப்பள்ளி, **68**வது வட்டம் பழங்காநத்தம் | மதுரை |
| 83 | அரசு உயர்நிலைப்பள்ளி, பொதும்பு | மதுரை |
| 84 | அரசு உயர்நிலைப்பள்ளி(பெண்கள்), எம்.புளியங்குளம் | மதுரை |
| 85 | நகராட்சி உயர்நிலைப்பள்ளி, திருப்பரங்குன்றம் | மதுரை |
| 86 | அரசு உயர்நிலைப்பள்ளி, அரவங்குறிச்சி | திண்டுக்கல் |
| 87 | அரசு உயர்நிலைப்பள்ளி, தெண்ணம்பட்டி | திண்டுக்கல் |
| 88 | அரசு உயர்நிலைப்பள்ளி, செங்குறிச்சி | திண்டுக்கல் |
| 89 | அரசு உயர்நிலைப்பள்ளி, மந்திச்சுணை | **தேனி** |
| 90 | அரசு உயர்நிலைப்பள்ளி, எரசக்க நாயக்கனூர் | **தேனி** |
| 91 | அரசு உயர்நிலைப்பள்ளி, தாமரைக்குளம் | **தேனி** |
| 92 | அரசு  உயர்நிலைப்பள்ளி, வாய்க்கால்பாறை | **தேனி** |
| 93 | அரசு உயர்நிலைப்பள்ளி, சிலுக்கப்பட்டி | **சிவகங்கை** |
| 94 | அரசு உயர்நிலைப்பள்ளி, புழுதிப்பட்டி | **சிவகங்கை** |
| 95 | அரசு உயர்நிலைப் பள்ளி,  பூவநாதபுரம் | **விருதுநகர்** |
| 96 | அரசு உயர்நிலைப்பள்ளி, எம். தங்கமாள்புரம் | தூத்துக்குடி |
| 97 | அரசு உயர்நிலைப்பள்ளி (பெண்கள்),  பத்தமடை | **திருநெல்வேலி** |
| 98 | அரசு உயர்நிலைப்பள்ளி, புளியரை | **திருநெல்வேலி** |
| 99 | அரசு உயர்நிலைப்பள்ளி, வடக்கு அரியநாயகிபுரம் | **திருநெல்வேலி** |
| 100 | அரசு உயர்நிலைப்பள்ளி, தெங்கம்புதூர் | கன்னியாகுமரி |

j.rÃjh
muR brayhs®.

// c©ik efš//

muR rh®ò¢ brayhs®.

## மாண்புமிகு முதலமைச்சரின் ஆணை

## 100 உயர்நிலைப்பள்ளிகள் மேல்நிலைப்பள்ளிகளாக தரம் உயர்த்தி 900 ஆசிரியர் மற்றும் 100 மேல்நிலைப்பள்ளி தலைமையாசிரியர் பணியிடங்கள் அனுமதித்து ஆணை.

2011–2012–ம் கல்வி ஆண்டில் 100 அரசு / நகராட்சி / மாநகராட்சி உயர்நிலைப் பள்ளிகளை மேல்நிலைப் பள்ளிகளாக தரம் உயர்த்த மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள் ஆணையிட்டுள்ளார்கள். ஆண்டுதோறும் மேல்நிலைப் பள்ளிகளில் அறிவியல் பாடப்பிரிவு மட்டும் துவங்கிட 5 பணியிடங்கள் மட்டுமே இதுவரை வழங்கப்பட்டு வந்துள்ள நிலையில், தற்போது தரம் உயர்த்தப்படும் ஒவ்வொரு மேல்நிலைப் பள்ளியிலும் கூடுதலாக கலைப் பாடப் பிரிவு துவங்கிட அதாவது வரலாறு, பொருளியல் மற்றும் வணிகவியல் முதுகலை ஆசிரியர் பணியிடங்களும் கூடுதலாக அனுமதித்து மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள் ஆணையிட்டுள்ளார்கள்.

2. தரம் உயர்த்தப்படும் ஒவ்வொரு மேல்நிலைப் பள்ளிகளுக்கும் தமிழ், ஆங்கிலம், கணிதம், இயற்பியல், வேதியியல், உயிரியல், வரலாறு, பொருளியல் மற்றும் வணிகவியல் பாடங்களை போதிக்க ஏதுவாக தலா 9 முதுகலை பட்டதாரி ஆசிரியர் பணியிடங்கள் வீதம் மொத்தம் 900 புதிய பணியிடங்களும் மற்றும் 100 உயர்நிலைப்பள்ளி தலைமை ஆசிரியர் பணியிடங்களை மேல்நிலைப் பள்ளி தலைமையாசிரியர் பணியிடங்களாக நிலை உயர்த்தியும் ஆக மொத்தம் 1000 பணியிடங்கள் தோற்றுவிக்கப்பட்டு ஆணைகள் வெளியிடப்பட்டுள்ளன. இப்பணியிடங்களுக்கான தோராய செலவினம் ஆண்டொன்றுக்கு ரூ.44.91 கோடி ஏற்படும்.